Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



மார்ச்
25

## மங்கள வாழ்த்துத் திருநாள்

To

BOOK POST

If Undeliveried please return to ...

Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

TO SERVE THE LORD AND HIS PEOPLE

# Bulletin

## Diocese of Marthandam

### மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



## நம் ஆண்டவரின் உயிர்ப்புத் திருநாள்

மலர் 21 மார்ச் 2024 இதழ் 3

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 08.03.2024 | Friday | 4.00 pm | Women's Day Celebration | MIDS-Atoor |
| 09.03.2024 | Saturday | 12.00 pm | Holy Mass<br>MCYM Year Plan Inaguration | Anakarai<br>DM Meenachal |
| 10.03.2024 | Sunday | 2.30 pm | Legion of Mary | Mtm - Cathedral |
| 13.03.2024 | Wednesday | 10.30am | Marian Movement Loan Distribution | MIDS |
| 15.03.2024 | Friday | | Bible Convention | Mavelikarai |
| 28.03.2024 | Thursday | | Maundy Thursday | Nagercoil |
| 29.03.2024 | Friday | | Good Friday | Vimalapuram |
| 30.03.2024 | Saturday | | Easter Holy Mass | Vimalapuram |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 21 மார்ச் 2024 இதழ். 3

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***

***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***

***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***

***Diocese of Marthandam***



## THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH


MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum - 695 004


Prot. No. CCL 1/2024 20.01.2024

## Circular

### காதோலிக்கா தினம் - 2024

***மேதகு ஆயர்களே, வணக்கத்திற்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றம்பான்மார்களே, மதிப்பிற்குரிய குருக்களே, திருத்தொண்டர்களே, இருபால் துறவிகளே, ஆண்டவரில் அன்பிற்குரிய விசுவாசிகளே!***

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை சுயஆட்சி அதிகாரமுள்ள திருச்சபையாக உயர்த்தப்பட்டதன் 19-ம் ஆண்டு விழா 2024 பிப்ரவரி 4-ம் நாள் கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தை காதோலிக்கா தினம் என அழைக்கிறோம். இறைத்திட்டம் இறையன்பு இவற்றுடன் இணைந்து பயணித்ததன் விளைவே நமது திருச்சபை கடந்த காலத்தில் கடவுள் நம்மை அற்புதமாக வழிநடத்தினார். திருப்பாடல் ஆசிரியருடன் இணைந்து இறைவனுக்கு நன்றிச் சொல்வோம். “ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; ஏனெனில், அவர் நல்லவர்; என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு” (திபா. 107:1). “ஆண்டவரின் பேரன்பை முன்னிட்டு, மானிடரான அவர்களுக்கு அவர் செய்த வியத்தகு செயல்களை முன்னிட்டு, அவர்கள் அவருக்கு நன்றி செலுத்துவார்களாக!” (திபா.107:21). நமது திருச்சபையின் திருப்பணிகள் அனைத்தும் இறையாசீருடன் முன்னேற காதோலிக்கா தினத்தில் சிறப்பாக இறைவேண்டல் செய்வோம். நம்பிக்கை உணர்வுடனும் உண்மையான அர்ப்பண மனநிலையுடனும் திருச்சபையின் திருப்பணிகளை செய்ய இறைவேண்டுதலுடன் உறுதி எடுப்போம். காதோலிக்கா தினத்தின் ஆசீரை சபைமக்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1930-ம் ஆண்டு இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகையின் தலைமையில் நடந்த மறுவொன்றிப்பு இயக்கம் வாயிலாக மலங்கரை கத்தோலிக்க திருச்சபை உதயமானது. மறுவொன்றிப்புக்கு பின் 75 ஆண்டுகள் கடந்த போது இத்திருச்சபை அனைத்துலக கத்தோலிக்கத்

திருச்சபையில் சுய ஆட்சி அதிகாரமுள்ள திருச்சபையாக உயர்த்தப்பட்டது. நினைவில் வாழும் மேதகு ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகியோரின் தியாகம் கலந்த அர்பணத்தால் திருச்சபை வளர்ந்தது. இறையாட்சி பணி செய்து திருச்சபையின் வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணம் செய்து இறைவனடி சேர்ந்த அனைவரையும் இறைவனின் திருமுன் ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம். தற்பொழுது திருச்சபையின் திருப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஆயர் பெருமக்கள், குருக்கள், துறவியர், இறைமக்கள் ஆகிய அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன்.

நாமனைவரும் மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை வாயிலாக உலகத்தில் கிறிஸ்துவின் சாட்சிகளாக மாற அழைத்து வேறுபடுத்தப்பட்டிருக்கிறோம். அனைத்துலக கத்தோலிக்க திருச்சபையின் மனநிலையுடன் இணைந்து தனிதிருச்சபையாய் திருப்பணி செய்கிறோம். கீழை திருச்சபைகளை குறித்து இரண்டாம் வத்திகான் திருச்சங்க ஏடு கூறுவது இங்கே குறிப்பிடதக்கது: “கிறிஸ்துவின் மறையுடலாகிய தூய கத்தோலிக்க திருச்சபை ஒரே நம்பிக்கை, ஒரே அருளடையாளங்கள், ஒரே ஆட்சிமுறை ஆகியவற்றால் தூய ஆவியில் உறுப்புகளாக ஒன்றிணைக்கப்பட்டுள்ள நம்பிக்கை கொண்டோரால் ஆனது. பல்வேறு குழுக்களாக இருக்கும் இம்மக்கள் திருச்சபை ஆட்சி அமைப்பால் ஒன்றுபட்டு தனி சபைகளாக அல்லது தனிவழிபாட்டு முறைகளாக அமைகின்றன'' (OE 2). தூய பேதுருவின் வழிவந்தவராகிய திருதந்தையுடனும் திருச்சபையின் படிப்பினைகளுடனும் இணைந்து செயல்பட நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். உண்மையான சான்று பகிர இதுவரை நமக்கு இயன்றது என்றால் இந்த ஒன்றிப்பே அதற்கு காரணம். கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையோடு இணைந்து இந்த உலகிற்கு ஒளி கொடுப்பவர்களாய் மாறுவோம். மாறுபட்ட சிந்தனைகளும் எண்ணங்களும் விருப்பங்களும் கருத்தாக்கங்களும் நம்மை வழிநடத்த அனுமதிக்க வேண்டாம். மாறாக, திருத்தூதர் பவுலின் வார்த்தைகள் நம்மை வழிநடத்தட்டும். “கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். எனவே இனி வாழ்பவன் நானல்ல. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்” (கலா 2:19-20). கிறிஸ்துவில் வாழ்ந்து முன்னோக்கி பயணிக்க ஆயத்தமாவோம். புனே-கட்சி தூய எப்ரேம் மறைமாவட்டத்தின் புதிய



மேய்ப்பனாக பேரருட்தந்தை மத்தாயி கடவில் நியமிக்கப்பட்டுள்ளார். பெதனி துறவற சமூகத்தின் தலைவராக திருப்பணி செய்து வரும் வேளையில் ஆயர் நிலை திருப்பணிகளுக்காக அவர் நியமனம் பெற்றுள்ளார். ஜனவரி மாதம் 9-ம் நாள் அவருடைய சொந்த பங்கில் வைத்து ரம்பானாக அருட்பொழிவு பெற்றார். அவரது ஆயர் திருநிலைபாடு மற்றும் பதவி ஏற்பு 2024-ம் ஆண்டு பிப்ரவரி 15-ம் நாள் புனாவில் நடைபெறவுள்ளது. ஆயர் திருநிலைபாட்டு நிகழ்வுகளும் அவரது திருப்பணிகளும் இறையாசீர் பெற்றதாக அமைய இறைவனை வேண்டுவோம். புனே-கட்கி மறைமாவட்ட ஆயராகவும் பரிபாலகராகவும் மேதகு ஆயர் மார் அந்தோணியோஸ் செய்த திருப்பணிகள் புகழ்ச்சிக்குரியது. திருச்சபையின் பெயரில் மேதகு ஆயர் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

நமது திருச்சபையின் 28-வது ஆயர் மாமன்ற கூடுகை 2024, பெப்ரவரி 19-23 வரையுள்ள நாட்களில் காதோலிகேட் மையத்தில் வைத்து நடைபெறவுள்ளது. தூய ஆயர் மாமன்றம் ஆசீர்வாதமாக நடந்தேற நீங்கள் அனைவரும் இறைவேண்டல் செய்யும்படி நினைவுபடுத்துகிறேன்.

2030-ம் ஆண்டு நாம் மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவை கொண்டாடவிருக்கிறோம். சில வருடங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இறைவேண்டுதலாலும் பல்வேறு ஆயத்த செயல்களாலும் இக்காலகட்டத்தை அலங்கரிப்போம். திருச்சபையின் திருப்பணி அமைப்புகளின் தலைமையில் திட்டமிட்டு வழங்கப்படும் செயல்திட்டங்களில் சபைமக்கள் அனைவரும் பங்கேற்று ஒத்துழைக்க வேண்டுமென்று நினைவுபடுத்துகிறேன். ஒரு திருச்சபையாக கிறிஸ்துவுக்கு சான்றுபகிர நம்மை மறுஅர்ப்பணம் செய்வோம்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையின் பொதுப்பணிகளையும் ஆயர் மாமன்ற பணிகுழுக்களின் செயல்பாடுகளையும் உயர் பேராய நிலை கூரியா அல்லது காதோலிகேட் மையம் ஒருங்கிணைத்து வருவது நீங்கள் அறிந்ததே. திருச்சபை மக்கள் தாராள உள்ளத்துடன் செய்யும் உதவிகளால் காதோலிகேட் மையம் செயல்பட்டு வருகிறது. காதோலிக்கா தினத்தில் சேகரிக்கப்படும் காணிக்கையை இக்கருத்திற்காக மாற்றி வைப்போம். காதோலிகேட்

மையத்தின் திருப்பணிகளுக்காகவும் திருச்சபையின் பொதுபணி களுக்காகவும் உங்கள் உளமார்ந்த நன்கொடைகள் வழங்கி உதவ வேண்டுமென்று அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

மதிப்பிற்குரிய பங்கு தந்தையர்கள் இந்த காரியத்தை பங்கு மக்களுக்கு தெரிவித்து உற்சாகப்படுத்த வேண்டும். பங்குகள் மட்டுமல்ல நமது நிறுவனங்களும், துறவற சமூகங்களும் அவற்றின் மாகாணங்களும் இந்த முயற்சியில் தாராள உள்ளத்துடன் பங்கேற்க வேண்டும். மறைமாவட்ட ஆயர்கள் அந்தந்த மறைமாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்படும் காணிக்கை மற்றும் நன்கொடைகளை சேகரித்து ஆயர் மாமன்ற தீர்மானத்திற்கேற்ப செலுத்த வேண்டிய விகிதத்தை ஆயர் மாமன்றத்தில் சமர்பிக்க வேண்டும். துறவற சமூகங்களின் தலைவர்களும், மாகாணங்களின் தலைவர்களும் (Provincial) தங்கள் துறவற சமூகங்களின் நன்கொடைகளை காதோலிகேட் மையத்தின் நிதிக்காப்பாளரிடம் ஆயர் மாமன்றத்திற்கு முன் ஒப்படைக்க வேண்டும். கடந்த ஆண்டுகளில் இம்முயற்சியில் தாராள மனதுடன் பங்கேற்ற உங்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டி நன்றி கூறுகிறேன்.

காதோலிக்கா தினத்தில் திருப்பலிக்கு பின் எல்லா பங்குகளிலும் நிறுவனங்களிலும் மறைபணிதளங்களிலும் காதோலிக்கா கொடி உயர்த்தி உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்நாட்களில் உலகின் பல்வேறு பகுதிகளில் நமது திருச்சபையின் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் ஆயர்களையும், குருக்களையும், துறவியரையும், இறைமக்களையும் நன்றியோடு நினைத்து பாராட்டி மகிழ்கின்றேன். அனைவருக்காகவும் இறைவேண்டல் செய்கின்றேன். கடவுளின் கருணையும் ஆசீரும் உங்கள் அனைவர் மேலும் நிறைவாக உண்டாகட்டும்.

கடவுளின் கருணையும், ஆசீரும் உங்கள் மேல் என்றென்றும் இறங்கி தங்குவதாக.

இவண்,
இறைவனில் உங்கள் எளிய ஊழியன்,

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத்
திருச்சபையின் காதோலிக்கோஸ்



**Most Rev. Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir. No. 2/2024 2.02.2024

## CIRCULAR

## தவக்காலமும் பாடுகளின் தியானமும்

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே/ இருபால் துறவிகளே/ இறைமக்களே,***

மனிதராதல் மறைபொருளை மகிழ்வாய் தியானித்து மகிழ்ந்த நாம் அதன் நிறைவாகிய சிலுவை மரணம், உயிர்ப்பு இவற்றை தியானிக்கும் தவக்காலத்திற்குள் கடந்து வருகிறோம். மனிதராதலின் நோக்கமே சிலுவை மரணம் தான். மரத்தினால் வந்த பாவத்தை போக்க மரச்சிலுவை ஏற்றார். உணவினால் வந்த பாவத்திலிருந்து விடுதலை தர தமது உடலையும் இரத்தத்தையும் உணவாக வழங்கினார். அந்த உணவு வெறும் வயிற்றை நிரப்பும் உணவல்ல மாறாக நிலையான வாழ்வு தரும் அழியாத உணவாக மாறினார். சரீரத்தில் வந்த பாவத்திற்கு பரிகாரம் செய்ய சரீரத்தில் பாடுகள் ஏற்றார். அவ்வாறாக, காயமுற்று கல்வாரியில் இரத்தம் சிந்தினார், காயமின்றி ஆழ்நிலை கதறலால் கெத்சமெனியில் இரத்தம் சிந்தினார். இவ்வாறு சிலுவை ஏற்று நம்மை பாவ நிலையிலிருந்து அருள் நிலைக்கு கொண்டு வந்தார். புனித அத்தனேசியாஸ் கூறுவது இங்கே குறிப்பிடதக்கது: "வார்த்தையாம் இறைவன் இறக்க இயலாது. எனவே எல்லோருக்குமாக தனது உடலை பலியாக்க மரணத்திற்குகந்த ஒரு உடலை ஏற்றார்". இது எவ்வாறு நடைபெறும் என்ற கேள்விக்கு அவர் கூறும் பதிலும் குறிப்பிடதக்கது: "வாக்கு மனுவுருவானார். நமக்கிருந்தவற்றை சொந்தமாக்கினார். தற்கையளிப்பு செய்தார்.

அவ்வாறு மனித குலதிற்கு மீட்பு சொந்தமானது". நீசாவின் புனித கிரிகோரியோஸ் இதனை தெளிவுபடுத்துகின்றார்: "ஒருவர் இம்மறையுண்மைகளை ஆய்வு செய்தால் அவரின் பிறப்பின் விளைவே மரணம் என்று கூறுவதை விட, இறப்பதற்காகவே அவர் பிறந்தார் என்று கூறுவதே சிறந்தது". மனிதராதலின் நோக்கம் சிலுவையே. மனிதராதலின் விளைவு சிலுவை அல்ல. இயேசுவின் சிலுவையில் தொடுபவர் அவரது பாடு, மரணம், உயிர்ப்பு என்னும் மறையுண்மைகளை தொட்டு அனுபவமாக்கி கொள்கிறார்.

இயேசுவின் பாடுகளை வரலாற்றில் நடந்த மிக கொடூரமான துன்பப்பாடுகள் என்று எண்ணுவதை விட அவரது துன்பப்பாடுகளுக்குள் மீட்பு மறைந்திருக்கிறது என்று எண்ணுவதே சிறந்தது. பாடுகளுக்கு இயேசுவின் வழிவந்தவர்கள் இருக்கலாம். ஆனால் இயேசுவை போல் துன்புற்றவர்கள் எவரும் இல்லை என்கிறார் தூய அம்புறோஸ். குற்றமற்றவர் நமது குற்றம் குறைகளை அவர் செய்தது போல் ஏற்றுகொண்டார் என்கிறார் தூய பெனவஞ்சர் இயேசுவின் துன்பப்பாடுகளை நினைத்து துயரத்தில் ஆழ்வதை விட கடவுளின் அன்பு பாவிகளின் மீது ஒழுகி வந்ததை பார்ப்பது சிறந்தது. எனவே இயேசுவின் போதனைகள், புதுமைகள் இவற்றின் நிறைவாக அமைகிறது சிலுவையில் அவர் தந்த போதனைகள். இயேசுவின் மீட்பு இரகசியங்களை புரிந்து கொள்பவர்களுக்கே திருச்சபை வாழ்வில் திருவருட்சாதனங்களை குறித்து புரிந்து கொள்ள முடியும்.

தவக்காலம் ஆண்டவரின் பாடுகளை குறித்து தியானிக்க நம்மை அழைக்கிறது. எந்த உணர்வுமின்றி சிலுவையை நினைத்து பார்ப்பவர்கள் உள்ளனர். சிலுவையை புறக்கணிப்பவர்களுக்கு சிலுவை மரணம், உயிர்ப்பு இவற்றின் பொருளை உணர முடியாது. அறிஞரான புனித பெனவஞ்சர், இயேசுவின் பாடுகளை தியானம் செய்த பலர் புனிதம் என்னும் போர்வையால் போர்த்தப்பட்டனர் என்கிறார். அருளுக்கு மேல் அருளும், புண்ணியத்திற்கு மேல் புண்ணியமும் சம்பாதிக்க விரும்புகிறவர்கள் இயேசுவின் பாடுகளை தியானம் செய்ய வேண்டும். மனசாட்சியின் காயத்தை ஆற்றவும்,



ஆன்மாவை புனிதபடுத்தவும், ஆன்மாவில் நிறைவு காணவும் இயேசுவின் திருக்காயங்களை குறித்த தியானத்தை விட சிறந்தது மற்றொன்று இல்லை என்கிறார் புனித பெர்னார்டு. மூன்று ஆண்டுகள் சித்ரவதை செய்யப்பட்ட தூய தேவசகாயத்தின் ஆன்மாவின் ஆழத்தில் இயேசுவின் சிலுவை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

புனிதர்கள் பாடுகளின் தியானத்தை ஞான வழியாக கற்றுக்கொண்டனர். சிலுவையுடன் அவரை பின்தொடர்ந்தவர்கள் அவரோடு இரண்டற கலந்தார்கள். ஒத்தமைவு நற்செய்திகளும், திருத்தூதர் யோவானும், தூய பவுலடியாரும் விளக்கி தரும் பாடுகளின் பாடங்களை உள்வாங்கி கொண்டால் அது ஆண்டவரோடு நம்மை நெருங்கி வரச் செய்யும். கிறிஸ்துவின் பாடுகளை குறித்து ஒருவர் ஒரு துளி கண்ணீர் பொழிந்தால் அது எருசலேம் திருப்பயணத்தை விட விலைமதிப்பு மிக்கது. ரொட்டியும் தண்ணீரும் அருந்தி ஓராண்டு காலம் நோன்பு இருப்பதை விட மேலானது என்கிறார் இயேசுவின் பாடுகளை உள்ளத்திலும் உடலிலும் உள்வாங்கிய தூய அகஸ்தினார். எல்லா வெள்ளிகிழமைகளிலும் ரொட்டி மட்டும் உண்டு தவம் செய்வதை விட சிறந்தது இயேசுவின் துன்பப்பாடுகளை தியானம் செய்வது என்கிறார் தூய ஆல்பர்ட். அருள்வாழ்வில் வளர விரும்புவோர் ஆண்டவருடைய துன்பப்பாடுகளை தியானியுங்கள். காயப்பட்டு கிடக்கும் ஆண்டவரை காண்பவர் யார் தான் தன் சொந்த துன்பப்பாடுகளை நினைத்து கவலை கொள்ள முடியும்? இயேசுவின் பாடுகளை இந்த தவக்காலத்தில் தினமும் தியானிப்போம். அப்போது நமது இதயம் இயேசுவின் பாடுகளை நினைத்து பற்றியெரிந்த பவுலின் இதயம்போல் சுடர்விட்டு துலங்கும். பாவம் என்னும் நீரோட்டத்திற்கு எதிராக கட்டும் உறுதியான தடுப்பணையே பாடுகளின் தியானம். இயேசுவின் பாடுகளை தியானம் செய்பவர்களுக்கு மீண்டும் மீண்டும் பாவத்தில் வீழ்வதற்கு இயலுமோ? இயேசுவின் பாடுகளை தியான சிந்தனையுடன் அனுகுபவர்கள் மீது அருள் ஒளி பதிந்து விடும். பாடுகளின் தியானத்திற்கு பாறையை பிளக்கும் ஆற்றல் உண்டு. நம் ஆண்டவரின் பாடுகள் குறித்து நாம் நிரந்தரமாக வாசிக்க வேண்டும்.

அது வழியாக வரும் நன்மை மிகப்பெரிது. எடுத்துக்காட்டாக, உன் இதயம் பாறை போன்று கடினமாக இருந்தாலும், ஆண்டவர் எள்ளி நகையாடப்பட்டார் என்றும், காயபட்டு நொறுக்கபட்டார் என்றும், இரத்தம் சிந்தினார் என்றும் நீ தியானிக்கும் போது உன் ஆன்மாவிலிருந்து இறுமாப்பு இறங்கி போகும் என்கிறார் தூய ஜாண் கிறிஸ்ஸோஸ்டோம்.

இயேசுவின் பாடுகளை கடவுளின் அன்பு ஒழுகி வரும் வற்றாத ஊற்றாக பார்க்க வேண்டும். தூய பவுஸ்தினாவுக்கு ஆண்டவர் வழங்கிய உரையாடலில் சில உண்மைகள் தெளிவு பெறுகின்றன. ஆண்டவர் வேண்டுதல் தொனியுடன் ஆணையிடுகிறார்: "எனது பாடுகளை நினைவு கூர்வாயாக. எனது வார்த்தைகளை நீ நம்பாவிட்டாலும், எனது காயங்களை நீ நம்பு" (Diary 379). "எனது துன்பப்பாடுகளை நீ தியானிக்கும் போது நீ என்னை மகிழ்விக்கிறாய்" (Diary 1612). இயேசுவின் பாடுகளை நாம் உள்வாங்கும் போது சூரிய ஒளியை போல் வேறுபட்ட பலன்களை தருகிறது. சூரிய ஒளி ஒருவருக்கு வெப்பத்தை தருகிறது, ஒருவரின் நனைந்த உடலை உலர செய்கிறது, இன்னொருவரின் உடலின் தொற்று கிருமிகளை கொல்கிறது, இன்னொருவருக்கு நோய் தடுப்பு சக்தியை அதிகரிக்கிறது. கடவுளின் அன்பின் மிகுதியையும் மனிதரின் பாவ கொடூரத்தையும் விளக்கும் துன்பப்பாடுகள் சிலருக்கு மனதிரும்புதலும், சிலருக்கு மன்னிக்கும் மனநிறைவையும், சிலருக்கு இயேசுவோடு நெருக்கத்தையும் தருகிறது, சிலரை அது கீழ்படிய தூண்டுகிறது, சிலரை பாவத்திலிருந்து விலகியிருக்க தூண்டுகிறது. அன்பின் மிகுதி என்ற அளவுகோலுக்கு மட்டுமே ஆண்டவரின் பாடுகளை விளக்கித்தர முடியும். 'தோன்றுக' என்ற வார்த்தையால் உலகை படைத்தவருக்கு 'மீட்பு உண்டாகுக' என்ற வார்த்தையால் மீட்பை தந்திருக்கலாம். ஆனால் கடவுள் மனித குலத்தை எவ்வளவு அன்பு செய்கிறார் என்பதை வெளிப்படுத்த சிலுவை மரணத்தை அவர் தேர்ந்து கொண்டார். தூய பவுலை, ஆண்டவர் எனக்காக மரித்தார், என்னை அன்பு செய்தார் என்ற எண்ணம் பற்றி எரியச்



செய்தது: "இவரே என்மீது அன்பு கூர்ந்தார். எனக்காக தம்மையே ஒப்புவித்தார்" (கலா 2:20)

இயேசுவின் சிலுவை மரணம் ஒரு சோக முடிவாகவோ, மாபெரும் தோல்வியாகவோ கருதப்படலாம். ஆனால் பவுலடியார் கூறுவதை போன்று "மனித ஞானத்தை விட கடவுளின் மடமை ஞானமிக்கது; மனித வலிமையை விட அவரது வலுவின்மை வலிமைமிக்கது" (1கொரி 1:25). தொடக்ககால கிறிஸ்தவ மக்களின் மனதில் முதலில் பதிவான செய்தி அவருடைய பாடு, மரணம், உயிர்ப்பு பற்றியதே. இயேசுவின் பாடு, மரணம், உயிர்ப்பு ஆகியவையே புதிய ஏற்பாட்டின் அடித்தளம். நற்செய்தி ஏடுகள் வரையப்படுவதற்கு முன்னரே இது தெளிவாயிற்று (கலா 6:14, 1கொரி 1:22, 2:2, உரோ 3:25, 5:8, பிலி 2:6-11, கொலே 1:20, எபே 2:14, 1தெச 2:15, 2 தீமொ 2:5, 1பேது 1;9, எபி 12:2). இயேசு நமக்காக பாடுபட்டார், மரித்தார், உயிர்த்தார் என்கிற நற்செய்தியே திருத்தூதர்களின் போதனைகளில் அடிப்படை (திப 1:22, 3:15, 4:29, 17:31). இயேசுவின் பாடுகள், மரணம் ஆகியவற்றின் நிழல் அவருடைய பிறப்பிலேயே அவர்மீது படர்ந்திருந்தது. அவரது பணிவாழ்விலும் இந்நிகழ்வு அவரை ஆக்கிரமித்து கொண்டிருந்தது. இயேசு பிறந்தவுடன் அவரை கொன்றுவிட துடித்தவன் ஏரோது அரசர். இயேசு கோவிலில் காணிக்கையாக ஒப்புவிக்கப்பட்ட போது சிமியோன் அருளிய இறைவாக்கு இயேசுவின் பாடுகளை முன்னறிவித்தது. "இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்; எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும்" (லூக் 2:34).

அன்பானவர்களே, தவகாலத்தில் இயேசுவின் பாடுகளை தியானித்து ஜெபம், தவம், தானதர்மம் என்கின்ற ஆன்மீகத்தின் அடிப்படைகளை செயலாக்கம் செய்து ஆண்டவரோடு நெருங்கி வருவோம். இயேசு பற்றிய நிரந்தர நினைவாகிய நற்கருணை பலியில் ஆர்வமுடன் பங்கேற்போம். அன்பு, சமத்துவம், பகிர்தல் இவற்றின் அருட்சாதனமே நற்கருணை. அப்பம் பிடுதல் என்கிற நற்கருணை

வழிபாடு ஆதி கிறிஸ்தவர்களை வழிநடத்தியது. இந்த தவகாலத்தில் நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் சிகரமும் என்ற மையசிந்தனையில் தியானங்கள், நற்கருணை ஆராதனை இவற்றில் பங்கேற்போம். பங்குதந்தையர்களும், பங்கு பேரவை உறுப்பினர்களும் இந்த தவக்காலத்தில் ஆன்மீகமான ஒரு புது எழுச்சிக்கு அயராது உழைக்கும்படி நினைவுபடுத்துகிறேன். ஆண்டவரின் பாடுகளை தியானித்து கடவுளின் அன்பை அனுபவமாக்கி பாவங்களிலிருந்து விலகி இருப்போம். போலித்தனமான இன்றைய சமூக வாழ்வில் பொதுநல உணர்வாலும் பிறர் நலஉணர்வாலும் சகோதரத்துவ எண்ணங்களாலும் கிறிஸ்துவுக்கு சான்று பகிர்வோம். ஜெபத்தையும் புதுப்பித்தலையும் நோக்கமாக கொண்டு இந்த தவகாலத்தை செலவிட்டு ஆண்டவரின் கைமாறு கருதாத உடனிருப்பை அனுபவமாக்குவோம். இந்த சமூகத்தில் கிறிஸ்துவின் விழுமியங்களை விதைகளாக விதைப்போம். புறக்கணிக்கப்பட்ட, துன்புறும் மக்களுடன் இணைந்து பயணிப்போம். கைவிடப்பட்ட முதியோர்களுக்கு கரம் கொடுப்போம், உதறி தள்ளப்பட்ட குழந்தைகளை பேணுவதில் அக்கறை கொள்வோம், சகோதரத்துவம் இல்லாத சமூகத்தில் சமூக அக்கறையும், அனைவரும் உடன் பிறந்தவர்கள் என்ற எண்ணமும் தழைத்தோங்க செய்வோம். கிறிஸ்தவத்தை சுமப்பவர்களாக இல்லாமல், சுவைத்து சுவையூட்டுபவர்களாக மாறுவோம்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*

**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்



# குருக்கள் செய்தி

மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்திர தியானம் 28.01.2024 முதல் 02.02.2024 வரை உள்ள நாட்கள் பாலா, அல்போன்சியன் மேய்ப்பு பணி இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இவ்வருடாந்திர தியானத்தை பேரருட்தந்தை மேத்யூ காக்காட்டுபள்ளில் V.S. மாகாண தந்தை அவர்கள் சிறப்பாக வழி நடத்தினார்கள். தியானத்தின் இறுதி நாளில் ஆயர் மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலி நிறைவேற்றி, இறந்த குருக்களுக்காகவும், இறைமக்களுக்காகவும் இறைவேண்டல் செய்தனர். இறுதியாக ஆயர் அவர்களின் அறிவுரை உரையோடு நிறைவுற்றது.

# இளம் குருமடச் செய்திகள்

குருமடத்தில் பணியாற்றிய அருட்சகோதரி. சிபியா அவர்களின் மறைவை ஒட்டி அதிபர் தந்தை, துணை அதிபர் தந்தை மற்றும் அருட்சகோதரர்கள் மார்த்தாண்டம் கன்னியர் இல்லத்திற்கு சென்று, அஞ்சலி செலுத்தியதோடு அவருக்காக இறைவேண்டல் செய்தனர்.

பெங்களூரு, தர்மாராம் உயர் குருமடத்திலிருந்து அருட்பணி ராஜேஷ் அவர்கள் குருமடத்திற்கு 15-02-2024 அன்று வருகை தந்து குருமாணவர்களை சந்தித்தனர்.

# மறைபரப்பு தளச் செய்திகள்

திருச்சி ஓலையூர் மறைபரப்பு தளத்தில் ஆலய வேலையானது 05.02.2024 அன்று ஆரம்பமானது, கட்டுமான வேலைகள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தேவதானம்பட்டி மறைபரப்பு தளத்தில் முதன்முதலாக அந்த மறைபரப்பு தளத்தை சார்ந்த இருவருக்கு 24.01.2024 அன்று திருமணம் நடைபெற்றது. மலங்கரை கத்தோலிக்க ஆராதனை முறைப்படி பங்குத்தந்தை அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள்.

களக்காடு நல்லநாதபுரம் மறைபரப்பு தளத்தில் மக்கள் வளர்ச்சி பணியாக ஒரு சிறு மருத்துவ சேவை மையம் கட்டுவதற்காக அரசு உரிமம் பெறப்பட்டு வேலை ஆரம்பிக்கும் தருவாயில் உள்ளது.

# கத்தோலிக்க மாணவர் இயக்கம் (CSL)

கத்தோலிக்க மாணவர் கூட்டமைப்பில் ஆண்டுவிழாவானது கடந்த பிப்ரவரி மாதம் 16-ம் தேதி மிகச் சிறப்பாக நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையுரை ஆற்ற மலங்கரை பள்ளிகூடங்களின் தாளாளராகிய அருட்தந்தை அருள் ஷைஜு அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். பல்வேறு பள்ளிக் கூடங்களிலிருந்து பிள்ளைகள் தங்களுடைய கலை நிகழ்ச்சிகளையும் நிகழ்த்தினர். இவ்வாண்டு விழாவில் ஏராளமான ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## எழுவோம் இயக்கம் – தன்னார்வலர் கூட்டம்

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டுவரும் எழுவோம் இயக்கத்தின் சார்பாக 22.01.2024 அன்று தன்னார்வலர் கூட்டம் நடத்தப்பட்டது. Sri Ram Cancer Foundation சார்பில் தன்னார்வலர்களுக்கு புற்றுநோய் வராமல் தடுப்பது குறித்தும், வந்தபின் எவ்வாறு சிகிட்சைபெற வேண்டும் என்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் புற்றுநோய் எதிர்ப்பு தினத்தன்று நடைபெற கூடிய நிகழ்வுகள் குறித்தும், தன்னார்வலர்கள் பிரச்சாரத்தின்போது எவ்வாறு செயல்பட வேண்டும் என்றும் விளக்கப்பட்டது. தொடர்ந்து போஸ்டர்கள், துண்டு பிரசுரங்கள் போன்றவை வழங்கப்பட்டன. இந்த கூட்டத்தில் 50-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்துகொண்டனர்.

## புற்றுநோய் விழிப்பணர்வு பிரச்சாரம்

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 4-ம் நாள் உலகம் முழுவதும் புற்றுநோய் எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது அதிகரித்துவரும் புற்றுநோய் குறித்து மக்களிடையே விழிப்பணர்வு ஏற்படுத்துவதற்காக 04.02.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிமுதல் 5 மணி வரை மிட்ஸ் பணி மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகள், ஆலயங்கள், குழுக்கள் நடைபெறும் இடங்கள் என 200-க்கும் மேற்பட்ட இடங்களில் வைத்து புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வுகளில் மிட்ஸ் இயக்குநர், அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், மிட்ஸ் பணியாளர்கள், தன்னார்வலர்கள், சுய உதவிக் குழு மற்றும் கோல்பிங் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு விழிப்புணர்வு கோஷங்கள் எழுப்பி துண்டு பிரசுரங்களை மக்களுக்கு வினியோகித்து புற்றுநோயை தடுப்பது குறித்து விழிப்புணர்வு அளித்தனர்.

## நலத்திட்ட உதவிகள்

1. 07.02.2024 அன்று All for Life, Life for All திட்டத்தின் வழியாக மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 28 உறுப்பினர்களுக்கு சிறுதொழில்கள் செய்ய ரூபாய் 1,08,540/- வழங்கப்பட்டது.

2. 07.02.2024 அன்று Penefirme நதிட்டத்தின் வழியாக மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 9 உறுப்பினர்களுக்கு சிறுதொழில்கள் செய்ய ரூபாய் 24,030/- வழங்கப்பட்டது.

3. 12.02.2024 அன்று குடும்பம் வாழ்வுபெறல் திட்டத்தில் பயன் பெற்று ஆறு ஆண்டுகள் முடிவடைந்த பயனாளிகளுக்கு அவர்களின் வங்கி கணக்கை முடித்து வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் மொத்தம் 17 பயனாளிகள் தங்கள் கணக்குகளைமுடித்து இத்திட்டத்திலிருந்து விடைபெற்றனர்.

### பிறநிகழ்வுகள்

1. 05.02.2024 அன்று மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம், முன்னாள் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் மற்றும் நாகர்கோவில் மண்டல இயக்குநர் அருட்தந்தை வில்பிறைட் ஆகியோர் அகஸ்தீஸ்வரம் மற்றும் மந்தாரம்புதூர் கிளஸ்டர்களில் உள்ள 25 சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு கன்னியாகுமரி மலங்கரை பவனில் வைத்து ஆரி தையல் கலைபயிற்சியினை துவங்கி வைத்தார்கள்.

2. 10.02.2024 அன்று தளிர்கள் உலகம் திட்டபயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு பயிற்சி மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

3. 12.02.2024 அன்று நடைக்காவு ஆலயத்தில் வைத்து 5 நாட்கள் நடைபெற்ற செல்போன் பழுது பார்க்கும் பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் மிட்ஸ் திட்டஅலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் மற்றும் திட்டஒருங்கிணைப்பாளர் திரு. பேட்ரிக் ஆன்றனி ஆகியோர் முன்னிலையில் துவங்கி வைத்தார்கள். பயிற்சியினை திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் நடத்தினார்கள். இப்பயிற்சியில் 25 சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

4. 14.02.2024 அன்று குடும்பம் வாழ்வுபெறல் திட்டத்தில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட 17 பயனாளிகளை ஒன்றிணைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் தலைமையில் திட்டஅலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்களால் வழிகாட்டுதல் பயிற்சி வழங்கப்பட்டது.

5. 14.02.2024 அன்று கோல்பிங் செயற்குழு கூட்டம் மிட்ஸ் இயக்குநர் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் 6 செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.





மார்த்தாண்டம் மறைமாவட்ட MCYM சார்பாக பொங்கல் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் MCYM மறைமாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் இயக்குநர் தந்தை, பொதுநிலை ஊக்குனர்கள், அருட்சகோதரி ஊக்குனர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அதைதொடர்ந்து அனைவரும் அவரவர் வீட்டில் தயார் செய்து கொண்டுவந்த மதிய உணவை பகிர்ந்து உண்டு மகிழ்ந்தார்கள்.

### Global Meet

மத்திய சபை சார்பாக நடைபெற்ற MCYM Global Meet ஜனவரி மாதம் 27 மற்றும் 28 ஆகிய நாட்களில் பெத்தேரி மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்றது. அதில் நமது மறைமாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். நமது மறைமாவட்ட Syndicae, Mr. Dines மத்திய செயலகத்தின் இணைச்செயலராக தேர்வு செய்யப்பட்டார்.

17.02.2024 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து மதியம் 2.30 மணிக்கு மறைவட்ட இயக்குநர் மற்றும் மறைவட்ட அருட்சகோதரி ஊக்குனர்கள், இணைத்து ஓராண்டிற்கான திட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டது.

### MCYM – கொல்லங்கோடு மறைவட்டம்

கொல்லங்கோடு மறைவட்டம் MCYM சார்பாக தவக்காலத்தை முன்னிட்டு 18-02-2024 அன்று கடுவாக்குழி புனித அல்போன்சா மலங்கரை கத்தோலிக்க ஆலயத்திலிருந்து தொடங்கி சிலுவைப்பாதை நடைபெற்றது. இதில் ஏராளமான இளையோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# MCA
## Diocese of Marthandam

பெப்ரவரி மாதத்திற்கான MCA கூட்டமானது 18-02-2024 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு குழித்துறை அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மார்த்தாண்டம் மறைமாவட்ட முதல் ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு பாதயாத்திரை 7-4-2024 ஞாயிற்றுகிழமை நடத்தப்படும்.
2. மே மாதம் 5-ம் தேதி மறைமாவட்டத்திலுள்ள எல்லா பங்குகளிலும் MCA தினம் கொண்டாடப்பட வேண்டும். அத்தோடு அனைத்து பங்குகளிலும் MCA கொடி ஏற்றி உறுதி மொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.
3. MCA நலத்திட்ட கூப்பன்களை எல்லா பங்குகளிலும் கொடுத்து சேகரிக்கும் தொகையினை மே மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும்.

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA ஆன்மீக இயக்குநராக பல ஆண்டுகள் பணியாற்றிய பேரருட்தந்தை றாபின்சன் அவர்கள் பணிமாறுதல் பெற்று புதிய ஆன்மீக இயக்குநராக அருட்தந்தை அற்னால்டு டயஸ் அவர்கள் பணி பொறுப்பை பெற்றுக் கொண்டார்கள்.

### பேராலயக் கட்டுமான பணிக்காக பூனா வாழும் மார்த்தாண்டம் மலங்கரை மக்கள் வழங்கிய நன்கொடைகள் (பெப்ரவரி - 2024)

| S.No. | Name | Amount | S.No. | Name | Amount |
|---|---|---|---|---|---|
| 1. | Chandradas | 15,000 | 4. | Raja Sekar | 500 |
| 2. | Raja Francis | 5,000 | 5. | Jebin | 5,000 |
| 3. | Suresh | 5,000 | 6. | Sathyaraj | 5,000 |



# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

1) மார்த்தாண்டம் மறைமாவட்டர் HOM அனைத்து பணியாளர்களின் மாதாந்திர ஆலோசனை கூட்டம் 09.02..2024 அன்றுர் HOM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் நடைபெற்றது. HOM பணியாளர்கள் அனைவரும் கலந்துகொணடனர். அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் ஒவ்வொருவரின் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். செயலர் அறிக்கை வாசித்தார். அந்தந்த துறைகளின் 3 மாத கால அறிக்கையை அனைத்து பணியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. HOM சிறப்புப் பள்ளியின் புதிய கட்டிடத்திற்கான சிறப்பு கலைநிகழ்ச்சிகள் பெப்ருவரி 25-ம் தியதி நடைபெறும் என இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதற்குவேண்டிய அனைத்து ஒத்துழைப்பையும் பணியாளர்கள் செய்யவேண்டும் என இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பின்னர் HOM மேற்கொள்ளவேண்டிய இதரபணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. பின்னர் இயக்குநர் அவர்களின் ஜெபத்துடன் கூட்டம் முடிவுற்றது.

2) HOM Palliative care சேவைபணிகள் தற்போது சிறப்பாக நடைபெற்று வருகிறது. அருட்சகோதரி ஐஸ்வரியாஅவர்கள் தலைமையில் செவிலியர்கள் திருமதி ஆஷா மற்றும் திருமதி ஷீபாஆகியோர் பணியாற்றி வருகின்றனர். தினந்தோறும் படுக்கை நோயாளிகளை சந்தித்து அவர்களுக்கு வேண்டிய மருத்துவ சேவையை செய்துவருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக படுக்கையில் அவதியுறும் நோயாளிகளுக்கு சக்கர நாற்காலி walker மற்றும் கட்டில் ஆகியவை வழங்கப்பட்டது.

முதற்கட்டமாக ஊரம்புவிளையை சார்ந்த திருஏசுதாஸ் அவர்களுக்கு மருத்துவ கட்டில் மற்றும் கிராத்தூரை சார்ந்த டெயிசி, மார்த்தாண்டம் விஜி ஜார்ஜ் மற்றும் ஆற்றூரை சார்ந்த கெலன் ஆகியோருக்கு சக்கரநாற்காலி வழங்கப்பட்டது. மேலும் மாமூட்டுக் கடையை சார்ந்த பத்றோஸ், கிராத்தூரை சார்ந்த ரெஞ்சிதா மற்றும் சூரியகோட்டை சார்ந்த வசந்தா ஆகியோருக்கு walker வழங்கப்பட்டது.

3) மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் சார்பாக பேதுருவின் கரங்கள் என்னும் மாதாந்திர மருத்துவ உதவித் திட்டம் செயல்பட்டு வருகிறது தற்போது 42 நிரந்தர நோயாளிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. பெப்ருவரி மாதத்திற்குரிய உதவித்தொகை 20.02.2024 அன்றுர் HOM அலுவலக வளாகத்தில் வைத்து; வழங்கப்பட்டது.

# மேரி மக்கள் துறவற சபை

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாணத்தின் பொதுக் கூடுகை (Synaxis) 21.01.2024 முதல் 29.01.2024 வரை நடைபெற்றது. இக்கூடுகை தியானம் மற்றும் வகுப்புக்களோடு தொடங்கியது. அத்தோடு மார்த்தாண்டம் மேரி மக்கள் கன்னியர் சமூகத்தின் புனித சூசையப்பர் மாகாணத்தின் புதிய பொறுப்பாளர்களின் தேர்வு DM தலைமை சகோதரி மதர் லிடியா அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. புனித சூசையப்பர் மாகாண புதிய மாகாண தலைவியாக அருட்சகோதரி றோஸ் பிரான்சிஸ் அவர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். அவர்களுடன் இணைந்து ஆலோசனை குழு உறுப்பினர்களான

Rev. Sr. Dr. சோபி தெரஸ் DM (துணை மாகாண தலைவி)

Rev. Sr. Dr. அர்ச்சனா தாஸ் DM

Rev. Sr. பெனடிக்டா பிரான்சிஸ் DM

Rev. Sr. Dr. ராணி சேவியர் DM

Rev. Sr. நவீன் ஜார்ஜ் DM (நிதி காப்பாளர்)

Rev. Sr. ஏஞ்சல் மரியா DM (செயலர்)

## இறைவனடி சேர்ந்தார்கள்

மேரி மக்கள் துறவற சமூகத்தின் புனித சூசையப்பர் மாகாண உறுப்பினரான அருட்சகோதரி அமலா டி.எம் (86) அவர்கள் 25.01.2024 வியாழக்கிழமை மதியம் 12.45 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்கள். இவர் குழித்துறை மறைமாவட்டம் மாங்குழி பங்கை சார்ந்த காலஞ்சென்ற திரு. தேவசகாயம், திருமதி. ஞானபிரகாசி இவர்களின் 6 வது பிள்ளை. இவரின் நல் அடக்கம் 26.01.2024 வெள்ளிக்கிழமை





அருட்சகோதரி அமலா டி.எம் (86)

மாலை 5.00 மணிக்கு மார்த்தாண்டம் மறை மாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்களின் தாய் இல்ல கல்லறைத் தோட்டத்தில் நடைபெற்றது.

இவர் மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்குட்பட்ட மார்த்தாண்டம், விமலபுரம், கிராத்தூர் அணக்கரை போன்ற பள்ளிக் கூடங்களில் இடைநிலை ஆசிரியையாகவும், தலைமை ஆசிரியையாகவும் பணியாற்றினார். மார்த்தாண்டம், விமலபுரம், கிராத்தூர், நடைக்காவு, பாலவிளை, மஞ்சத்தோப்பு, அணக்கரை, புங்கறை, மாத்தார், செல்லங்கோணம், சாரூர், முதலார், பிலாங்காலை, பனச்சமூடு, மத்தியாஸ் நகர், குழித்துறை போன்ற மறைபரப்புத் தளங்களிலும், செல்லங்கோணம் புனித வின்சென்டிபோள் பாலபவனிலும் பணியாற்றியுள்ளார்.

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாணத்தின் உறுப்பினராகிய அருட் சகோதரி சிபியா டி.எம் (53) இறையடி சேர்ந்தார். சங்கனாசேரி மறை மாவட்டத்தில் செறுகடவு பங்கில் கானாட்டு குடும்பத்தில் காலம் சென்ற திரு தேவசியா திருமதி பிரஜித் தம்பதிகளின் ஆறாவது பிள்ளை இவர் 14.02.2024 செவ்வாய்கிழமை இறையடி சேர்ந்தார்கள். அவர்களின் நல்அடக்கம் 15.02.2024

வியாழக்கிழமை காலை 11 மணிக்கு மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகையின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்களின் தாய் இல்ல கல்லறை தோட்டத்தில் நடைபெற்றது.



அருட்சகோதரி சிபியா டி.எம்
(53)

இவர் மார்த்தாண்டம் பனச்சமூடு, மறையூர், கிராத்தூர், மரியாகிரி, காஞ்சியோடு, பூதப்பாண்டி, களியக்காவிளை போன்ற இடங்களில் மறைபரப்பு பணியாற்றி இருக்கிறார். கிராத்தூர் மரியாகிரி போன்ற இடங்களில் கல்வி நிறுவன பொறுப்பாளராகவும் பணியாற்றி இருக்கிறார் தற்பொழுது ஜெர்மனியில் டோர்ட்முண்ட் கன்னியர் இல்லத்தின் தலைமை அருள் சகோதரியாக பணிபுரிந்து வந்தார்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**மார்ச்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 15, 16 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

### பட்டமளிப்புவிழா (Graduation Day Ceremony)

நமது கல்வியியல் கல்லூரியில் 12-வது, 13-வது மற்றும் 14-வது பட்டமளிப்பு விழாவானது 27-01-24 அன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட மேதகு ஆயர் முனைவர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களும், முனைவர் சாமுவேல் ஞான பிரகாஷ் வின்செண்ட் (கடல்சார் அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மையம் இராஜாக்கமங்கலம்) துறைத்தலைவர் அவர்களும் பட்டயச் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் வழங்கினார்கள். மேலும் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட் தந்தை. ஜோஸ் பிரைட் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இந்த பட்டமளிப்பு விழாவில் மாணவர்கள் அனைவரும் பங்கேற்று பட்டயச் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

### குருக்கள் கூடுகை

குலசேகரம் மறைவட்ட குருக்களுக்கான கூடுகையானது 23-01-2024 அன்று மாலை 6.00 மணிக்கு மாத்தார் பங்குதந்தை இல்லத்தில் வைத்து மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூடுகையில் கலந்துகொண்ட அருட்தந்தையர்கள் தங்கள் பங்குபணி பற்றிய அனுபவங்களையும் மறைவட்ட வளர்ச்சி பற்றிய கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டார்கள். இறுதியாக மறைவட்ட முதன்மை குரு அவர்கள் உரையோடும் இறைவேண்டலோடும் கூடுகை நிறைவுற்றது.

# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை
**ஆல்பின்**
மார்ச் 01



பேரருட்தந்தை
**ஜோசப் சுந்தரம்**
மார்ச் 19



பேரருட்தந்தை
**ஜோஸ் பிறைட்**
மார்ச் 19



பேரருட்தநதை
**பிராங்கிளின் ஜோஸ்**
மார்ச் 19



அருட்தந்தை
**ஜோஸ்**
மார்ச் 19



அருட்தந்தை
**ஜோஸ்பின் ராஜ்**
மார்ச் 19



அருட்தந்தை
**ஜோஸ் பென்னட்**
மார்ச் 19



அருட்தந்தை
**ஷிஜு ஜோஸ்**
மார்ச் 19



அருட்தந்தை
**ஜோஸ் பாறவிளை**
மார்ச் 19



அருட்தந்தை
**விபின்ஸ் வில்சன்**
மார்ச் 19



அருட்தந்தை
**ஜோஸ் G**
மார்ச் 19



அருட்தந்தை
**விபின் ராஜ்**
மார்ச் 19



# ஆயரின் பெப்ரவரி மாத நிகழ்வுகள்



- 1-2 ➢ மறைமாவட்ட குருக்களுக்கான ஆண்டிறுதி தியானத்தில் கலந்துக்கொண்டார்.
- 3-7 ➢ பெங்களூரில் நடைபெற்ற CBCI கூடுகையில் கலந்துக்கொண்டார்.
- 9 ➢ மரியாகிரி Malankara School of Commerce-ன் ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.
- 9 ➢ புனித மரியன்னை உயர் குருமடத்தின் Commission கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.
- 10 ➢ மரியாகிரியில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட உதவி பெறும் பள்ளிகளின் ஆசியர்களின் கூடுகை மற்றும் பிரிவு உபசார விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.
- 10 ➢ Malankara School of Word and Worship ல் பயில்பவர்களுக்கு இறையியல் வகுப்பை வழிநடத்தினார்கள்.
- 10 ➢ அணக்கரை Mary Mount CBSE பள்ளிக்கூடத்தின் ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.
- 11 ➢ அணக்கரை ஆலயத்தில் புதிதாக கட்டியெழுப்பபட்ட கொடிமரத்தை அர்ச்சித்து அருளினார்.

11 ➢ கும்பக்கோணம் மறைமாவட்ட ஆயர் அருட்பொழிவில் கலந்துக்கொண்டார்.

12 ➢ விஜயபுரம் மறைமாவட்ட துணை ஆயர் அருட்பொழிவில் கலந்துக்கொண்டார்.

13 ➢ வெட்டுமணி தூய அந்தோணியார் திருத்தலத்தில் மறையுரையாற்றினார்.

15 ➢ புனே மறைமாவட்ட ஆயர் அருட்பொழிவில் கலந்துக்கொண்டார்.

19-22 ➢ காதோலிக்கேட் மையத்தில் வைத்து நடைபெற்ற ஆயர் மன்ற கூடுகையில் கலந்துக் கொண்டார்.

22 ➢ குழித்துறை மறைமாவட்ட ஆயர் அருட்பொழிவில் கலந்துக்கொண்டார்.

25 ➢ குழித்துறை மறைமாவட்ட ஆயர் அவர்கள் திருத்துவபுரம் தூய மூவோரிறைவன் பேராலயத்தில் தனது முதல் நன்றி திருப்பலியை நிறைவேற்றிய வேளையில் மறையுரையாற்றினார்.

25 ➢ YMCA அரங்கத்தில் நடைபெற்ற HOM சிறப்பு பள்ளிக்கூடத்தின் நிகழ்சியை துவங்கி வைத்தார்.

27 ➢ ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்களுக்கான General Body கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.



## இம்மாதம் நினைவு கூர

மார்ச் 2024

3 – கினானைத்தோ ஞாயிறு

5 – மோறான் மார் பசேலியோஸ் கிளிமீஸ் காதோலிக்கோஸ் ஆண்டகை பதவியேற்ற நாள்

9 – செபஸ்திய நகர் 40 இரத்தசாட்சிகள்

10 – க்பிப்தோ ஞாயிறு
தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

13 – மேதகு ஆயர்கள், வின்சென்ட் மார் பவுலோஸ், தோமஸ் மார் அந்தோணியோஸ், சாமுவேல் மார் ஐரேனியூஸ், பிலிப்போஸ் மார் ஸ்தேபானோஸ் ஆண்டகைகளின் ஆயர் திருநிலைப்பாடு

19 

17 – சமியோ ஞாயிறு
தவக்காலத்தின் ஆறாம் ஞாயிறு
புனித பேட்ரிக்

18 – எருசலேம் நகர் மார் கூறிலோஸ்
தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையின் பெயர் விழா

19 – மார் யோசேப்பு

21 – மார் யோவான் கிளிமாக்கூஸ்

22 – நாற்பதாம் வெள்ளி


23 – லாசரை உயிர்ப்பித்த சனிக்கிழமை

25 

24 – குருத்து ஞாயிறு
சமூக வளர்ச்சி தினம்

25 – மங்கள வாழ்த்துத் திருநாள்
திருப்பாடுகளின் திங்கள்

26 – திருப்பாடுகளின் செவ்வாய்
குட்காவு மறைமாவட்டம் உதயம்

29 

27 – திருப்பாடுகளின் புதன்

28 – பாஸ்கா வியாழன்

29 – புனித வெள்ளி

30 – புனித சனி

31 

31 – உயிர்ப்புத் திருநாள்
ஹேவோறே வாரம்

## மறைபரப்புத் தளங்களின் செய்திகள்





திருச்சி ஒலையூர் மறைபரப்புத்தளம்



தேவதானப்பட்டி மறைபரப்புத்தளம் – திருமணத்திருச்சடங்கு

## DM Convent



புதிய பொறுப்பாளர்கள் தேர்வு

## MCA



புதிய இயக்குநர் பொறுப்பேற்பு

## MIDS





## HOM









## குருக்கள் செய்தி



குருக்களுக்கான வருடாந்திர தியானம்

## CSL




கத்தோலிக்க மாணவர் இயக்கம் – ஆண்டுவிழா

## Mar Chrysostom B.Ed College, Kirathoor



பட்டமளிப்பு விழா (Graduation Day Ceremony)

## MCYM





கொல்லங்கோடு மறைவட்டம் – ஒருங்கிணைந்த சிலுவைப்பாதை

